அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2022

# தமிழ்

# ஆண்டு 12

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: 04.06.2022** | **பக்கங்கள்: 20** |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. உயிர்மெய்க் குற்றெழுத்துகளின் எண்ணிக்கை
   1. தொண்ணூறு
   2. நூற்றுப்பதினாறு
   3. நூற்று இருபத்தாறு
   4. முப்பது

2. தமிழுக்கு உரைநடையை அறிமுகம் செய்தவர்
   1. கார்டுவெல்
   2. யீ. யு. போப்
   3. வீரமாமுனிவர்
   4. மறைமலையடிகள்

3. நிறைந்த அறிவுடையோர் பணிவாக இருப்பர் என்ற கருத்தை விளக்கும் பழமொழி
   1. கீறி ஆற்றினால் புண் ஆறும்
   2. கிட்டாதாயின் வெட்டென மற
   3. காய்த்த கொம்பு பணியும்
   4. கிட்டப் போனால் முட்டப்பகை

4. உயிர்த்தொடர்க் குற்றியலுகரச் சொல்
   1. வீடு
   2. பயறு
   3. சால்பு
   4. செலவு

5. குலோத்துங்க சோழனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட சிற்றிலக்கியம்
   1. கலிங்கத்துப்பரணி
   2. நந்திக்கலம்பகம்
   3. தமிழ் விடு தூது
   4. குற்றாலக்குறவஞ்சி

6. யானை, கரும்பு, மூங்கில் எனும் பலபொருள் தரும் ஒரு சொல்
   1. பதி
   2. வளை
   3. அகம்
   4. வேழம்

1 2 3 4

7. கொரோனா நோய்த்தொற்றால் உலகமே முடங்கிக் கிடந்தது. இச்சொல்லியத்தில் ஆகுபெயராக வந்த சொல்
   1. உலகமே
   2. கொரோனா
   3. கிடந்தது
   4. நோய்த்தொற்று

8. 53 தமிழ் அரசியல் கைதிகள் சிங்கள அரசினால் படுகொலை செய்யப்பட்ட இடம்
   1. செஞ்சோலை வளாகம்
   2. வெலிக்கடைச் சிறைச்சாலை
   3. காலிமுகத்திடல்
   4. யாழ்ப்பாணப் பொதுநூலகம்

9. செம்மஞ்சள் என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   1. செம் + மஞ்சள்
   2. சென் + மஞ்சள்
   3. செம்மை + மஞ்சள்
   4. செந் + மஞ்சள்

10. நாகரிகத்தின் மேம்பட்ட நிலையில் தமிழர் வாழ்ந்த சிந்துவெளி நகரங்கள்
   1. மொகஞ்சதாரோ, அரப்பா
   2. ஈரான், ஈராக்
   3. பாகித்தான், ஆப்கானித்தான்
   4. மொசப்பத்தேமியா, அரேபியா

11. உணவு வகைகளை ஆக்கும் இடம்
   1. உப்பரிகை
   2. மேல்மாடம்
   3. அட்டில்
   4. அல்லங்காடி

12. மெய் முன் உயிர் புணர்ந்த சொல்
   1. காலைக்காட்சி
   2. தாயன்பு
   3. மொழியறிவு
   4. வாட்போர்

1 2 3 4

13. மொழிக்கு இறுதியில் வரும் மெய்யெழுத்துகளுள் சில
    1. ச், ந், ட், ற்
    2. ம், ண், ல், ள்
    3. ற், வ், ட், ந்
    4. ப், ங், ச், க்

14. வீரமாமுனிவர் எழுதிய சொற்பொருள் விளக்க நூல்
    1. சதுரகராதி
    2. திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்
    3. பிரதாப முதலியார் சரித்திரம்
    4. சீறாப்புராணம்

15. நேற்று நல்ல மழை. இச்சொல்லியத்தில் தோன்றாமல் உள்ள உறுப்பு
    1. பயனிலை
    2. எழுவாய்
    3. செயப்படுபொருள்
    4. அடைமொழி

16. பண்டைத்தமிழர் நோய்நொடியின்றி நீண்ட காலம் வாழ்ந்தனர். நோய்நொடி என்பது
    1. அடுக்குத்தொடர்
    2. இரட்டைக்கிளவி
    3. அடுக்கிடுக்குத்தொடர்
    4. இணைமொழி

17. தமிழர் தேசத்தைச் சிங்கள தேசத்துடன் வல்லிணைப்புச் செய்தவர்கள்
    1. பிரித்தானியர்
    2. ஒல்லாந்தர்
    3. போர்த்துக்கேயர்
    4. இசுப்பானியர்

18. வள்ளல் பேகன் மயிலுக்குப் போர்வை கொடுத்தார். இதில் இடம்பெற்றுள்ள நான்காம் வேற்றுமைப் பொருள்
    1. தகுதி
    2. கொடை
    3. நட்பு
    4. பகை

19. கரிகாற்சோழன் காவிரிக்கு அணை கட்டுவித்தார். இச்சொல்லியம்
    1. தன்வினை
    2. செயப்பாட்டுவினை
    3. எதிர்மறைவினை
    4. பிறவினை

1 2 3 4

20. பத்துப்பாட்டினுள் அடங்கும் நூல்களுள் ஒன்று
   1. ஐங்குறுநூறு
   2. நற்றிணை
   3. மலைபடுகடாம்
   4. இன்னா நாற்பது

21. கெடுதல், தோன்றல் ஆகிய புணர்ச்சிகளைப் பெற்றுவந்த சொல்
   1. தமிழாலயம்
   2. கடற்கரை
   3. மரப்பொந்து
   4. பனிப்பாவை

22. தமிழிலக்கியங்களில் நிலத்தையும் பொழுதையும் குறிப்பது
   1. உரிப்பொருள்
   2. முதற்பொருள்
   3. திணைப்பொருள்
   4. கருப்பொருள்

23. குயில் கூவும். அது போல ஆந்தை
   1. கீச்சிடும்
   2. அகவும்
   3. அலறும்
   4. குறுகுறுக்கும்

24. வடமொழி தமிழ்மொழியோடு அளவின்றிக் கலந்த காலம்
   1. சங்ககாலம்
   2. சங்கமருவியகாலம்
   3. சோழர்காலம்
   4. பல்லவர்காலம்

25. தங்கை அழகிய கொலுசு அணிந்திருந்தாள். கொலுசு என்பது
   1. இயற்சொல்
   2. திரிசொல்
   3. வடசொல்
   4. திசைச்சொல்

(25 X 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. புறத்திணை இலக்கியங்களில் கூறப்பட்ட போர் அறங்களுள் இரண்டை எழுதுக.

___

___

2. 'வைர அட்டிகை' என்னும் கதை சொல்லும் செய்தி என்ன?

___

___

3. தெற்காசியாவில் ஒரே நாளில் இடம்பெற்ற மிகப்பெரிய இடப்பெயர்வு எது?

___

___

4. புலம்பெயர் இலக்கியப் படைப்புகளின் உள்ளடக்கமாக அமைவனவற்றுள் இரண்டை எழுதுக.

___

___

5. கூடு என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு சொல்லியம் எழுதுக.

பெயர்: ___

வினை: ___

6. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

தத்தம்பொருள் உணர்த்தும் இடைச்சொல்: ___

புறச்சுட்டு: ___

எதிர்காலப் பெயரெச்சம்: ___

காரணச் சிறப்புப்பெயர்: ___

7. கலப்புச்சொல்லியம் ஒன்று எழுதுக.

___

___

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. நட்பு
2. 

(5 புள்ளிகள்)

**4. பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

“கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே” என்று கல்வியின் அகத்தியத்தை எமக்கு உணர்த்துவது நீதி நூலாம் நறுந்தொகை ஆகும். கல்வி மாந்தராகப் பிறந்த அனைவருக்கும் பொதுவானதாகும். 21ஆம் நூற்றாண்டான இன்றைய காலத்தில் அனைத்துச் சிறுவர்களுக்கும் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைப்பதுபோலத் தோன்றினாலும் இவ்வாய்ப்புக் கிடைக்காமல் எத்தனையோ சிறுவர்கள் இலைமறை காயாக அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இன்றும் இந்நிலைமை தொடர்கிறது. கல்வியானது அனைத்து நாடுகளிலும் எல்லோரும் எப்போதும் பெற்றுக் கொள்ளும் வகையில் முதன்மையானதாக ஆக்கப்பட்டுள்ளது. ஒருவர் கல்வி பெறுவதைத் தடுத்தல் என்பது மாந்த உரிமைமீறலாகும். வளர்முக நாடுகளில் காணப்படும் குடும்பச்சுமைகள், இனக்கலவரங்கள், வறுமை, வழிகாட்டலின்மை, தனிமாந்த மேலாண்மை போன்றவை சிறுவர்கள் கல்வி கற்பதற்குப் பெரும் இடையூறுகளாக இருக்கின்றன. இதனாலேயே, பொருண்மிய வளர்ச்சி குன்றிய நாடுகளில் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகி வருகின்றனர். பொருண்மிய வளர்ச்சியில் மேம்பாடடைந்து வரும் இந்தியா, பாகித்தான் போன்ற நாடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. அறிவியலும் தொழில்நுட்பமும் மேலோங்கிய இன்றைய காலத்திற்கூட இச்சிக்கலுக்கான வழி கிடைக்கவில்லை என்பது வருத்தத்திற்கு உரியது. அனைத்துச் சிறுவர்களுக்கும் கல்வி கிடைக்கும் வகையில், உலகத் தொண்டு நிறுவனங்களும் சிறுவர் நலன்புரி அமைப்புகளும் முன்னின்று செயலாற்றுதலே இதற்குத் தகுந்த தீர்வாக அமையும்.

(5 புள்ளிகள்)

5. **தரப்பட்டுள்ள பந்தியை உமது வாழிடமொழியில் வாசித்து, தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.**

**ஆங்கிலம்:**

I went to homeland with my family for summer vacation. There we stayed at my uncle's house. My grandparents live with my uncle's family. My vacations were very entertaining to visit places and meet relatives. One day I was playing with my uncle's children. While we were playing, I heard the sound of Grandma calling me from the garden of the house. I stopped playing and went to the garden. There, my grandfather handed me a sapling and said, "Plant this sapling with your hand." I planted it. "I want you to plant a sapling whenever you come to homeland." Realizing that natural resources would be conserved by planting trees, I gladly agreed.

**யேர்மனி:**

Ich bin mit meiner Familie in den Sommerferien in die Heimat gereist. Dort haben wir im Haus meines Onkels übernachtet. Meine Oma und Opa leben mit der Familie meines Onkels zusammen. Mit der Besichtigung von Orten und dem Treffen der Verwandten vergingen meine Ferientage sehr glücklich. Eines Tages spielte ich mit den Kindern meines Onkels. Dann hörte ich vom Hausgarten meine Oma nach mir rufen. Ich hörte auf zu spielen und ging in den Garten. Dort gab mir mein Opa ein Baumsetzling und sagte „Pflanze diesen Baumsetzling mit deinen Händen ein“. Ich habe es gepflanzt. „Ich möchte, dass du bei jedem Besuch der Heimat einen Baumsetzling pflanzt“, sagte er. Ich habe erkannt, dass durch die Baumpflanzung die Natur erhalten und habe fröhlich zugestimmt.

**நோர்வே:**

I sommerferien reiste jeg og min familie til mitt hjemland. Der bodde vi hos min onkel. Min mormor og morfar bor sammen med min onkel og hans familie. Feriedagene mine var lykkelige fordi vi brukte dem på å møte familie og se steder. En dag lekte jeg med min onkel sine barn. Da hørte jeg bestemor rope på meg fra hagen. Jeg stoppet å leke og dro til hagen. Der ga hun meg et lite tre og sa: “Du må plante dette treet.” Jeg plantet det treet. “Jeg ønsker at du planter et tre hver gang du kommer til hjemlandet.” sa hun. Jeg følte jeg ble fornøyd og innså at naturressurser blir vedlikeholdt på grunn av treplanting.

**இத்தாலி:**

Nelle vacanze estive sono andato in patria con la mia famiglia. Lì abbiamo alloggiato a casa di mio zio. Mia nonna (materna) e mio nonno (materno) vivono insieme alla famiglia di mio zio. Le mie vacanze sono trascorse molto felicemente visitando luoghi e incontrando parenti. Un giorno stavo giocando con i figli di mio zio. In quel momento, dall'orto di casa ho sentito il suono di mia nonna (materna) chiamarmi. Io ho smesso di giocare e sono andato nell'orto. Lì mio nonno (materno) mi ha dato un alberello e mi ha detto: "pianta questo alberello con le tue mani". Io l'ho piantato. "Io desidero che tutte le volte che vieni in patria devi piantare un albero". Realizzando che piantando gli alberi le risorse vengono preservate ho accettato felicemente.

**நெதர்லாந்து:**

Tijdens de zomer vakantie ben ik samen met mijn gezin naar mijn moederland geweest.Daar verbleven we in het huis van mijn oom. Mijn oma en opa wonen bij het gezin van mijn oom .mijn vakantie was erg leuk omdat ik plaatsen ging bezoeken en familie leden ging ontmoeten. Op een dag was ik aan het spelen met de kinderen van mijn oom toen hoorde ik mijn opa vanuit de tuin roepen ik stopte met spelen en ging naar de tuin . Daar gaf mijn opa mij een plantje en zei plant deze plant met jouw handen . ik heb dat geplant. .Hij zei ik wil dat jij elke keer als je naar je moederland komt een plant planten .ik ging daarmee akkoord ,omdat ik begreep dat het plannen van bomen nodig is voor het behoud van de natuur.

**டென்மார்க்:**

Jeg rejste til hjemland i min sommerferie. Der boede vi hos min onkel. Min mormor og morfar bor sammen med min onkels familie. Min sommerferie forløb rigtig dejligt med at besøge steder og familien. En dag legede jeg med min onkels børn. Da hørte jeg min mormor kalde på mig fra husets have. Jeg stoppede med at lege og gik ud i haven. Der gav min mormor mig et lille træ og sagde, "Plant dette med din hånd." Jeg plantede det. "Jeg ønsker, at du planter et træ hver gang, du kommer til hjemland.", sagde min mormor. Naturressourcer bevares ved træplantning, derfor sagde jeg glædeligt ja.

**சுவீடன்:**

Under sommarlovet åkte jag till hemlandet med min familj. Där bodde vi/sov över hos min morbror. Min mormor och morfar lever tillsammans med min morbrors familj. Mina dagar passaerade med glädje genom att besöka platser och träffa släktingar. En dag lekta jag med min morbrors barn. Då hörde jag ljudet av min mormor ropandes efter mig från husets trädgård. Jag slutade leka och gick till trädgården. Där gav min mormor en telning/stickling och sade “Plantera den här telning/sticklingen med dina händer”. Jag planterade den. “Varje gå gång du kommer till hemlandet vill jag att du planterar en teing/stickling/träskott innan du lämnar/reser tillbaka” sade hon. Jag förstod att genom att plantera träd så värnar man miljö gick med på det med glädje.

**பின்லாந்து:**

Minä menin perheeni kanssa kotimaahan kesälomalla. Siellä me asuimme minun sedän luona. Minun äidin äiti eli mummi ja vaari asuvat setänsä kanssa. Me kävimme katsomassa paikkoja ja tapaamalla sukulaisia loma meni iloisesti. Eräänä päivänä olin leikkimassa sedän lapsen kanssa ja kuulin mummin huutavan. Silloin minä lopetin leikkimisen ja juoksin mummon luo, jolloin mummo antoi yhden kasvin ja pyysi istuttamaan sen käsillä. Minä istutin kasvin maahan. Mummo sanoi minulle ”kun sinä tulet kotimaahan, sinun tulisi istuttaa yksi kasvi”. Hyväksyin, että puiden istuttaminen edesauttaa luonnon säilymistä.

(5 புள்ளிகள்)

**தமிழ்:**

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

**6. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. புதுக்கவிதை
2. சிற்றிலக்கியங்கள்
3. நீங்கள் விரும்பிய தலைப்பில் சிறுகதை ஒன்று.

(15 புள்ளிகள்)

# பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

உலகில் இன்று ஏறக்குறைய ஆறு மில்லியனுக்கும் அதிகமானோர் ஏதிலிகளாக இருக்கின்றார்கள். ஏதிலி என்றால், உயிர் வாழ்வதற்கு அச்சுறுத்தல் தரக்கூடிய சூழலில் இருந்து தப்பி வேறொரு நாட்டில் புகலிடம் பெறுபவர் என்று கொள்ளலாம். இனவழிப்பு, வன்முறைகள், போர் போன்ற காரணங்களால் ஒருவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. ஏதிலிகள் உயிர்தப்பி வேறு நாட்டுக்குச் சென்றடைவதற்குள் பல்வேறு இடர்களை எதிர்கொள்கின்றார்கள். அவர்கள் இடைவழியில் தங்கள் உயிரையும் இழக்க நேரிடுகிறது. சிறிய படகுகள் மூலம் மாக்கடல்களில் பயணிக்கும்போது படகுகள் நீரில் மூழ்கி, பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளார்கள். மேலும், கடுமையான பனிப்பொழிவுகளில் சிக்குண்டு உயிரிழந்தோரும் உண்டு. இவைமட்டுமன்றி, குடிவரவுச் சட்டத்தை மீறி உள்நுழைந்த காரணத்தால் பல்லாயிரக் கணக்கானோர் புகலிட நாடுகளின் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள். ஐ.நா.சபை யூன் 20ஆம் நாளை உலக ஏதிலிகள் நாளாக அறிவித்துள்ளது. உள்நுழையும் ஏதிலிகளுக்குப் புகலிடம் கொடுக்கும் பல ஐரோப்பிய நாடுகள் பாரிய பொருண்மியச் சுமைகளையும் உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளையும் எதிர்கொள்கின்றன. சிங்கள அரசு மேற்கொண்ட இனவழிப்பினால் அண்மைக்காலங்களில் இலக்கக் (இலட்சம்) கணக்கான தமிழர்கள் ஏதிலிகளாக ஆக்கப்பட்டுள்ளார்கள். ஏதிலிகளாகப் புகலிட வாழ்வைத் தொடங்கிய தமிழர்களில் பெரும்பாலானோர் இன்று தமது முதுமைக் காலத்துள் அடியெடுத்து வைத்துள்ளார்கள். இம்மூத்த தலைமுறையினர் 'என்றோ ஒரு நாள் விடுதலை அடைந்த எம் சொந்த மண்ணுக்குத் திரும்பிச் செல்வோம்' என்ற நம்பிக்கையோடு புகலிட வாழ்வின் வலிகளைச் சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

1. ஏதிலிகள் என்றால் யாவர்? (2 புள்ளிகள்)

____________________________________________

____________________________________________

2. புலம்பெயரும்போது ஏதிலிகள் எதிர்கொள்ளும் இடர்களுள் ஒன்றை எழுதுக. (1 புள்ளி)

____________________________________________

____________________________________________

3. எம் மூத்ததலைமுறையினரின் நம்பிக்கை என்ன? (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

4. எந்த நாள் ஏதிலிகள் நாளாக ஐ.நா. சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது? (1 புள்ளி)

______________________________________________

5. தமிழரின் அண்மைக்காலப் புலப்பெயர்வுக்குக் காரணம் என்ன? (1 புள்ளி)

______________________________________________

6. ஏதிலிகள் வாழ்வு பற்றிய உமது உணர்வை எழுதுக. (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

(9 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றிற்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.**
**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- சிறுவர் கலைவிழா
- இலக்கிய ஒன்றுகூடல்
- சிறுவர் விளையாட்டுவிழா
- சிறுவர்களுக்கான சிற்றிதழ்

1. ______________________________

புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தாய்நிலம் மறவா இலக்கிய ஆர்வலர்களே! படைப்பாளர்களே! உங்களின் தாய்மொழிப் பற்றை நாம் அறிவோம். உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள இதோ ஓர் அரிய வாய்ப்பு. சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர்கள் நாம். காலத்தைக் காட்டும் கண்ணாடியாம் இலக்கியச் சோலையில் ஒன்றிணைவோம். இளையோர் மனங்களில் தமிழ் இன்பமதைக் கொட்டி விதைப்போம். வாருங்கள் படைப்பாளர்களே! தாய்மண் பயனுற ஒன்றிணைந்து பயணிப்போம்.

2. ________________________________________

மாதந்தோறும் உங்கள் சிறார்களை மகிழ்விக்கும் 'இளம் தளிர்' இம்முறையும் புதுப்பொலிவோடு உங்கள் இல்லம் தேடி வருகிறது. சிறுவர்களின் சிந்தனையைத் தூண்டும் விடுகதைகள், புதிர்கள் போன்றவற்றுடன் அவர்களை மகிழ்விக்கப் பல நகைச்சுவைக் கதைகளையும் தாங்கி வருகிறது. அத்துடன், இம்முறை புதிதாக ஓவியம், பாடல் போன்ற கலைவடிவங்களும் இணைக்கப்பட்டுள்ளன. சிறார்களே! பயன்பெறும் வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!

3. ________________________________________

ஆடல், பாடல், இசைக்கருவிகள் ஒருங்கிணையும் சிறுவர்கள் திருவிழா. இது புலம்பெயர் தேசத்து சிறுவர்களின் ஆற்றல்களை வெளிச்சம் போட்டுக்காட்டும் உயர் நோக்கோடு ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. இலைமறை காயாக உள்ளவர்களை வெளிக்கொணரும் நிகழ்வு இது. இவ்வாண்டு தனது திறமையைச் சிறப்பாக வெளிப்படுத்தும் ஒருவருக்குச் சிறப்புப் பரிசு ஒன்று காத்திருக்கிறது. சிறார்களே! பங்குபற்றுங்கள்! திறமையை வெளிப்படுத்துங்கள்! அனைவரையும் வருக! வருக! என அழைக்கின்றோம்.

(3×2=6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| மொத்தப் புள்ளிகள் | | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |